# NGM COLLEGE

(AUTONOMOUS)

Re-Accredited with 'A' Grade by NAAC

An ISO 9001 : 2015 Certiied Institution

POLLACHI - 642 001



# மனையியல் மகத்துவம்

(சான்றிதழ் பாடத்திட்டம்)

(Certificate Course)

## குடும்பப் பண்பாடும் பாரம்பரியமும்

இரண்டாம் தாள்

*Empower the Youth to Enrich the Nation*

# மனையியல் மகத்துவம்

## சான்றிதழ் பாடத்திட்டம்

## (Certificate Course)

முனைவர் [illegible]
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

# குடும்ப பண்பாடும் பாரம்பரியமும்

## இரண்டாம் தாள்

பதிப்பு

**என்.ஜி.எம்.கல்லூரி**

**பொள்ளாச்சி**

பாட நூல் : மனையியல் மகத்துவம்
பதிப்பு : முதற்பதிப்பு - 2018
வெளியீடு : என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

## ஆலோசனைக் குழு

**டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்**
தலைவர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

**முனைவர் வாசுகி ராஜா**
புலமுதன்மையர், மனையியல் கல்வித் துறைகள்
அவினாசிலிங்கம் உயர்நிலைக் கல்வி கோவை.

**முனைவர் மணிமொழி**
இணைப் பேராசிரியர்,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் -
நிகர்நிலைப்பல்கலைக்கழகம், கோவை.

**முனைவர் அ.லோகநாயகி**
உதவிப் பேராசிரியர், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோவை.

**திருமதி சுமதி முத்துசாமி**
ஆசிரியர் மற்றும் தலைவர், கிராமப்புற தத்தெடுப்புத் திட்டம்
அறிவுத் திருக்கோவில், பொள்ளாச்சி.

## நூல் ஆக்கக் குழு

**தலைவர்**

முனைவர் பொ.மா.பழனிசாமி, முதல்வர்

**தொகுப்பாசிரியர்**

முனைவர் ப. பிருந்தா, தலைவர் வணிகவியல்துறை

**துணை தொகுப்பாசிரியர்கள்**

பேராசிரியர் என்.இராதா, தலைவர் ஆங்கிலத்துறை (சுயநிதி)
முனைவர் ஜி.அகிலாண்டேஸ்வரி, தலைவர் வணிக நிதியியல்துறை (சுயநிதி)
முனைவர் எம்.வி.சத்தியபாமா, தலைவர் மின்னணு வணிகவியல் துறை (சுயநிதி)
முனைவர் க.தனலட்சுமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பேராசிரியர் எஸ்.ஜெயலட்சுமி, தலைவர் மனிதவள மாண்புத்துறை (சுயநிதி)
முனைவர் ஆ.மகாலட்சுமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முனைவர் ப.வடிவேல், இணைப்பேராசிரியர் (ப.நி), தமிழ்த்துறை

அச்சிட்டோர் : ருக்மணி ஆப்செட் பிரஸ், சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை - 6
போன் : 0422-2672789, 2672435. ஈமெயில் : office.rukmaniop@gmail

## பொருளடக்கம்


அணிந்துரை
வாழ்த்துரை
ஆசிரியர் உரை
நோக்கங்கள்
பாடத்திட்டம்

1. சகிப்புத்தன்மையே வெற்றிக்கு வழி — 1
முனைவர் ப.பிருந்தா

2. சகிப்புத்தன்மைக்குச் சான்றுகள் — 8
முனைவர் எம்.வி.சத்தியபாமா

3. அனுசரணையும் அரவணைப்பும் — 16
முனைவர் ஆ. லோகமாதேவி

4. அனுசரணையின் பயன்கள் — 22
முனைவர் க.அகிலாண்டேஸ்வரி

5. பொறுமை பெண்ணின் பெருமை — 27
பேராசிரியர் பி.நாகராஜன்

6. பொறுத்தார் பூமி ஆள்வார் — 32
பேராசிரியர் பி.நாகராஜன்

7. குடும்ப கௌரவம் — 37
பேராசிரியர் நா.ராதா

8. பெண்கள் கௌரவத்தின் நாற்றங்கால்கள் — 44
முனைவர் எஸ். மாரியம்மாள்

9. மறப்போம் மன்னிப்போம் — 47
முனைவர் ப.வடிவேல்

10. மறப்பதும் மன்னிப்பதும் மங்கையரின் மாண்பு — 51
முனைவர் ப.வடிவேல்

மாதிரி வினாத்தாள்

## 1.2. சகிப்புத்தன்மைக்குச் சான்றுகள்

முனைவர் எம்.வி.சத்தியபாமா
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
மின்னணு வணிகவியல் துறை
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

நாம் வாழ்க்கையில் சந்திக்கக்கூடிய மனிதர்கள் அனைவரும் நமது விருப்பத்திற்கு ஏற்பவே நடந்து கொள்ள வேண்டும் என்று நினைக்காமல் அவரவர் விருப்பத்திற்கேற்பவே இருப்பார்கள் என்று ஏற்றுக்கொண்டால் அதுவே சகிப்புத்தன்மை ஆகும். யாரிடம் விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இருக்கிறதோ அவரே சகிப்புத்தன்மையுள்ளவராவார். தன்னுடைய தவறுகளைப் பிறர் சுட்டிக்காட்டும்போது பகுத்தறிவுடனும், பொறுமையுடனும் சகித்துக்கொண்டு சரிசெய்ய முயல வேண்டும். இது ஒவ்வொருவரின் மனதிலிருந்து எழக்கூடிய வாழ்வியல் நெறியாகும். நம் நாடு புத்தர், மகாவீரர் போன்ற சகிப்புத்தன்மை கொண்ட ஞானிகளைப் பெற்றது. நம்நாட்டில் சகிப்புத் தன்மைக்கு உதாரணமாக விளங்கி, பார் போற்றும் பெண்களாக, சமுதாயத்தையும் உயர்த்திய ஒரு சில பெண்களைச் சான்றுகளாக்கி வளரும் தலைமுறைக்குச் சகிப்புத்தன்மையின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### 1. அன்னை சாரததாதேவி

இராமகிருஷ்ண இயக்கத்தின் ஆணிவேராகத் திகழ்ந்து ஏராளமான சீடர்களைத் தனது சகிப்புத்தன்மையால் ஆன்மீகப் பாதையால் வெற்றிநடை போடக் காரணமானவர் அன்னை ஸ்ரீ சாரதா தேவி அவர்கள்.

சிறு வயதிலேயே துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அன்னையிடம் இருந்தது. இவர் கழுத்துவரை நிற்கும் தண்ணீரில் இறங்கி பசுக்களுக்குப் புல் வெட்டி வருவார். வயலில் வேலை செய்பவர்களுக்குச் சாப்பாடு கொண்டு வந்து கொடுப்பார். பருத்தித் தோட்டத்தில் தாயுடன் பருத்தி எடுப்பார்.

இளம்வயதிலேயே தனித்தன்மையுடன் விளங்கிய அன்னை, மன நிம்மதி வேண்டுமானால் பிறரிடம் குறை காணாதீர்கள். உங்கள் தவறுகளைப் பாருங்கள். மொத்த உலகையும் உங்கள் சொந்தமாக்கிக் கொண்டு பழகுங்கள் என்று கூறியுள்ளார்.

பக்தர்களுக்கு தானே சமைத்துப் பரிமாறும் தாய்மையுள்ளம் கொண்டவர். அவர்கள் சாப்பிடும்போது அருகில் இருந்து விசிறி விடுவார். தீட்சை அளிக்கும்போது ஆச்சார நியமங்களை விட தூய்மையான பக்திக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பார்.

அந்நாள் வழக்கப்படி ஸ்ரீராம கிருஷ்ணரை இவருக்குப் பால்ய விவாகம் செய்து வைத்தனர். ஆன்மீகத் தேடலில் மூழ்கிய இராமகிருஷ்ணரை மனநிலை சரியில்லாதவர் என்று கிராமமக்கள் கூறியதுடன், இச்சிறுமியின் நிலை பரிதாபத்திற்கு உரியது என்றும் கூறினர். ஆனால் அன்னை சாரதாதேவி இவர் இறைவடிவம் என்பதைப் புரிந்து கொண்டு அவரையே குருவாக ஏற்று துறவு வாழ்க்கை வாழ்ந்தார்.

இறுதி நாட்களில் ஸ்ரீராமகிருஷ்ணர் புற்றுநோயால் அவதிப் பட்டபோது கண்ணும் கருத்துமாகப் பணிவிடை செய்து அவரின் மறைவிற்குப் பிறகு சீடர்களைச் சிறப்பாக வழிநடத்திய பெருமையும் இவருக்கு உண்டு.

சாதாரண கிராமத்துப் பெண்ணாகக், கணவரைத் தேடி வந்த இவர் தனது சகிப்புத்தன்மையால் அன்னை சாரதா தேவியாக உயர்ந்து நிற்கிறார்.

## 2. கஸ்தூரிபா காந்தி

சகிப்புத்தன்மைக்கு மற்றுமொரு உதாரணமாகப் போற்றப்பட வேண்டியவர் நமது தேசப்பிதா மகாத்மா காந்தியின் வாழ்க்கைத் துணைவியார் கஸ்தூரிபா காந்தி. இவருக்கு 13 வயது நிரம்பியபோது மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற இயற்பெயர் கொண்ட மகாத்மாகாந்திக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டார், அப்போது காந்திக்கு வயது 14 ஆகும்.

காந்தி பொது வாழ்க்கையில் தன்னை அதிகமாக ஈடுபடுத்திக் கொண்டபோது குடும்பப்பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொண்டார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்கு மகத்தானது. உப்புச்சத்யாகிரகப் போராட்டத்தின் போது சகிப்புத்தன்மை நிறைந்த ஒரு வீரப் பெண்மணியாகவே நடந்து கொண்டார்.

மக்களால் வெறுக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசின் உப்புச்சட்டத்தை மகாத்மா தலைமையிலான 79 சத்யாசாரகிகள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து கிளம்பி 240 மைல்கள் நடந்து கடலை ஒட்டிய கிராமத்தை நோக்கிப் புறப்பட்டனர். இப்போராட்டத்தில் சாவதற்கும் தயாராக இருக்கவேண்டும் என்பது காந்தியின் இடிமுழக்கம். இதில் பெண்கள் அழத்தொடங்கிய போது கஸ்தூரிபா முன் வந்து நமது ஆண்கள் போர்வீரர்கள். நாம் நெஞ்சுரத்தோடு இருந்தால்தான் தைரியம் கொடுக்க முடியும் என்றாராம். சத்தியத்துடன் எனது பரிசோதனைகள் என்னும் நூலில் காந்தி கூறுகிறார். சாதிவெறி தலைவிரித்தாடிய சூழ்நிலையில் அவர்கள் வீட்டிற்குக் கிருத்துவ தலித் விருந்தாளி ஒருவர் வந்துள்ளார் தனது கட்டிலின் கீழ் வைக்கப்பட்ட மலத்துக்கான மண்பாண்டத்தைக் கழுவி வைக்க வேண்டும் என்று தெரியாமல் போய்விடவே அப்பணியைச் சங்கடத்துடன் கஸ்தூரிபா காந்தி செய்தார். காந்தி, இதை நீ கண்களில் நீர் வழிய வருந்திக்கொண்டு செய்வதேன்? என வாக்குவாதம் ஏற்பட்டு வீட்டை விட்டு கஸ்தூரிபாவை வெளியேறுமாறு சொல்ல "நான் எங்கே செல்வேன்? என கஸ்தூரிபா, மகாத்மாவின் தவறை எடுத்துரைத்தார். நான் முகத்தைத் தைரியசாலி போல் வைத்துக் கொண்டாலும் மிகவும் அவமானப்பட்டேன் எனது செய்கைக்காக" என்று எழுதியுள்ளார்.

பல சண்டை சச்சரவுகள் நடந்தாலும் "என்மனைவியின் நிகரற்ற சகிப்புத் தன்மையால் வெற்றி பெற்றேன்" என்று கூறியுள்ளார். இதிலிருந்து கஸ்தூரிபா காந்தியின் மட்டற்ற சகிப்புத்தன்மையாலே மகாத்மா என்னும் அஹிம்சைப் போராளி நாட்டிற்குக் கிடைத்தார் என்றால் அது மிகையாகாது.

### 3. அன்னை தெரசா

கருணைக்கும் சகிப்புத் தன்மைக்கும் பெயர் பெற்ற அன்னைத் தெரசாவைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது.

இவர் அதிகாலை எழுந்து குளித்துவிட்டுத் தனது குழுவினருடன் வீதிவீதியாக யாசகம் கேட்டுச் செல்வார். அப்படி ஒருநாள் ஒரு கடை வழியாகச் சென்று கொண்டிருக்கும்போது கடைக்காரரிடம் உதவி கேட்டார். அவர் கண்டுகொள்ளவில்லை. மீண்டும் அன்னை கைநீட்டி உதவி கேட்டார். அப்போது கடைக்காரர் வேண்டுமென்றே கோபத்துடன் நான் மென்று கொண்டிருந்த வெற்றிலை பாக்கை அன்னை தெரசாவின் கையில் துப்பினார். பொறுமை காத்த அன்னை இது நீங்கள் எனக்குக் கொடுத்தது. பசியில் வாடும் குழந்தைகளுக்கு ஏதாவது உதவி செய்யுங்கள் என்றதும், அந்தக் கடைக்காரர் தன் தவறை உணர்ந்ததுடன் தன்னால் முடிந்த அளவு பண உதவி செய்தார். மிகுந்த சகிப்புத்தன்மை இருந்ததால் மட்டுமே அவரால் இவ்வாறு நடந்து கொள்ள முடிந்தது.

ஒவ்வொருநாளும் பலவிதமான அவமானங்களையும், சங்கடங்களையும் சகித்துக் கொண்டு சேவையாற்றினார். அன்னை தெரசாவின் ஒரே நோக்கம். இவ்வுலகில் ஏழைகளாகவும், நோயாளிகளாகவும், துன்பப்படுபவர்கள், இலட்சக்கணக்கில் உள்ளனர். அவர்களுக்குச் சேவை செய்யவே கடவுள் என்னைப் படைத்திருக்கிறார் என்று கூறித் தொடர்ந்து சேவையாற்றி வந்தார்.

### 4. பாரதியின் செல்லம்மாள்

பாரதியார் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது சுதந்திரத்தை வலியுறுத்தும் கட்டுரைகளை இந்தியா பத்திரிகையில் வெளியிட்டு பிரிட்டிஷ் அரசின் தண்டனைக்கு ஆளானார். வேலையின்மையால் வீட்டில் வறுமை தாண்டவமாடியது.

பாரதியின் மனைவி செல்லம்மாள் வீட்டின் வறுமை தெரியாமல் கணவரைப் பராமரித்தார். மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லா உயிர்களுக்கும் வயிறு நிறைய வேண்டும் என விரும்பிய பாரதி வீட்டில் செல்லம்மாள் வைத்திருந்த அரிசியையும் வாரி இறைத்துவிட்டு மதிய உணவின்றி பசியோடு இருந்த நாட்களும் அவர்கள் வாழ்க்கையில் உண்டு. காக்கை குருவி எங்கள் ஜாதி என்று பாடிய பாரதி ஒருநாள் தன் நண்பர் ஒருவர் தனக்கு அளித்த பட்டாடையை வழியில் மேலாடையின்றி அவதிப்பட்ட ஒரு ஏழைக்கு அணிவித்து மகிழ்ந்தார். வறுமையிலும் மற்றவர்க்கு வழங்கும் உயர்குணம் கொண்டவராக பாரதி திகழ்ந்ததற்கு செல்லம்மாளின் சகிப்புத்தன்மையே காரணம்.

1951- ம் ஆண்டு திருச்சி வானொலியில் "என் கணவர்" என்ற தலைப்பில் திருமதி செல்லம்மாள் பாரதி ஆற்றிய உரையில் புதுவையில் தான் புதுமைகள் அதிகம் தோன்றின. புது முயற்சிகள், புதிய நாகரீகம், புதுமைப்பெண், புதுக்கவிதை என இத்தனைப் புதுமைகளும் எழுதுவதற்கு நான் தான் ஆராய்ச்சிப் பொருளாக அமைந்தேன். பெண்களுக்குச் சம அந்தஸ்து வழங்க வேண்டுமா? வேண்டாமா? என்று பலகாலம் ஆராய்ந்த பின்னரே பெண் விடுதலை அவசியம் என்று முடிவு கண்டு நடைமுறைப்படுத்துவதற்கு என் கணவர் துடித்தார். இந்த முடிவை அவர் காண்பதற்கு நான் மிகவும் சிரமப்பட வேண்டியதாயிற்று.

வறுமை கவிஞனின் தனி உடைமை. கவிஞனுக்கு இந்த மண்ணுலகில் இன்பம் அளிப்பது கவிதை. ஆனால், வயிற்றுக்கு உணவு தேடி வாழும் வாழ்க்கையை அவன் மனைவிதான் கண்டு பிடிக்க வேண்டி வருகிறது, கவிஞர்கள் தனித்துவமானவர்கள் என்றார்.

வறுமையிலும் சகிப்புத்தன்மையுடன் பாரதியுடன் இணைந்து வாழ்ந்த, இத்தகைய சிறப்பு வாய்ந்த மனைவி அமைந்த காரணத்தால்தான் தமிழ்ப்பணியிலும், பொது வாழ்விலும் பாரதியாரால் திறம்படச் செயல்பட முடிந்தது.

### 5. சாதனைப் பெண்களின் சகிப்புத் தன்மை

### மேரி கியூரி

நவம்பர் 7, 1867-இல் போலந்து நாட்டில் பிறந்தார். இருவேறு விஞ்ஞானத் துறைகளில் நோபல்பரிசு பெற்ற இருவரில் ஒருவரும் பியூரிகியூரியின் மனைவியுமான மேரிகியூரியின் முதன்மையான சாதனைகளில் ஒன்று கதிரியக்கம்.

யுத்தத்தின்போது மருத்துவமனைகளில் ஒரு கதிரியக்கராகப் பணியாற்றியபோது ஒழுங்கான உபகரணங்கள் அணியாததால் இவருக்குப் பாதிப்பு நேர்ந்தது. இன்றைய புற்றுநோய் சிகிச்சையின் போது பயன்படுத்தப்படும் கதிரியக்க சிகிச்சைக்கு முன்னோடியாக இருந்தது கியூரியின் கண்டுபிடிப்பே. ஆரம்ப காலங்களில் அவருக்குச் சரியான ஆய்வுக் கூடம் அமையவில்லை. கியூரி பெரும்பாலும் தங்களின் ஆய்வுகளைப் பெரும்பாலும் பள்ளிக்கு அருகில் உள்ள கூடத்தில் நடத்தினார். அவை காற்றோட்டமாகவோ, நீர்புகா அமைப்பையோ கொண்டிருக்கவில்லை. அப்பள்ளி அவர்களுக்கு எந்த நிதி உதவியும் அளிக்கவில்லை. 1980-களில் அவருடைய ஆவணங்கள் கதிரியக்க வெளிப்பாடுகளைக் கொண்ட ஆபத்தானவையாகக் கருதப்பட்டன. மேரிகியூரி பல வருடங்களாகக் கதிரியக்க ஆய்வுகளில் ஈடுபட்டதால் இரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டார். மேரியின் இறப்பிற்குப் பிறகு தன் கணவருடன் புதைக்கப்பட்டார். 1995 - ஆம் ஆண்டு அவர்களின் சாதனைகளைப் பெருமைப்படுத்தும் விதமாக அவர்களுடைய கல்லறை அறுபது வருடங்களுக்குப் பிறகு பாரிஸ் பாந்தியனுக்கு மாற்றப்பட்டது. இதுவரை இவ்வாறு மரியாதைப் படுத்தப்பட்டிருக்கும் ஒரே பெண் மேரி கியூரிதான். இது அவருடைய சகிப்புத்தன்மைக்குக் கிடைத்த மணிமகுடம் என்றே கூறலாம்.

**இந்திரா காந்தி**

இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் ஒரே மகளும், இந்தியாவின் மூன்றாவது பிரதமருமான இந்திரா பிரியதர்ஷினி காந்தி ஜனவரி 19, 1966 - இல் பிரதம மந்திரியாகப் பதவியேற்றார்.

சிறந்த அரசியல் வல்லுநராகவும், சிந்தனையாளராகவும் மிகுந்த அதிகார பலமும் கொண்டு மிக உயர்ந்த பதவில் இருந்து இந்திரா காங்கிரஸ் என்ற பெயரில் தலைமை தாங்கி நாட்டை வழிநடத்தியவர்.

1975 -இல் அவசர நிலையை அறிவித்த இந்திராகாந்தி, அரசியல் சட்டத்தின் 352 ஆவது விதியைப் பயன்படுத்தி தனது அதிகாரத்தால் எதிர்க்கட்சிகளை ஒடுக்க நினைக்கிறார் என்று விமர்சிக்கப்பட்டாலும், சிறந்த நிர்வாகியாகப் பாரட்டப்பட்டார்.

சீக்கிய தீவரவாதம் வளர்ந்து வந்த சூழ்நிலையில் அது இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்குச் சவாலாக அமையும் எனத் தலைவர்கள் கருதினர். சீக்கியர்களின் புனிதக் கோவிலான பொற்கோவிலில் தீவிரவாதிகள் ஊடுருவி உள்ளதாக அறிந்து அவர்களைப் பிடிப்பதற்கு இராணுவத்திற்கு அனுமதி வழங்கினார். இந்த நடவடிக்கை சீக்கியர்களின் கோபத்தை அதிகப்படுத்தி அவரது பாதுகாவலர்களாலேயே படுகொலை செய்யப்படக் காரணமாக அமைந்தது.

வலுவான பாதுகாப்பு உள்ளுணர்வும், தனித்தன்மையும் பெற்றுச் செல்வாக்கு மிக்க குடும்பத்தில் ஒரே மகளாக அவதரித்த போதும் நாட்டின் மீது கொண்ட பற்றின் காரணமாக பல இன்னல்களைத் தனது அரசியல் வாழ்க்கையில் சகிப்புத்தன்மையோடு ஏற்றுக்கொண்டு நாட்டின் வளர்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்தார்.

**கிரண் பேடி**

2016 - ஆம் ஆண்டு மே 29 - இல் புதுச்சேரி மாநிலத்தின் லெப்டினென்ட் ஆளுநராகப் பொறுப்பேற்றார். அரசியல்வாதியாகவும், சமூக சேவகராகவும் ஓய்வு பெற்ற காவலருமான இவர் பன்முகம் கொண்டவர். காவல்துறையின் முதல் பெண் அதிகாரி என்ற பெருமை பெற்றவர். இவரது காவலர் பயிற்சியின்போது 80 ஆண்களில் தனி ஒரு பெண்ணாகச் சகிப்புத் தன்மையுடன் பயிற்சி முடித்து பெண் ஐ.பி.எஸ் அதிகாரியாகவும் ஆனார். காவல்துறை என்பது குற்றவாளிகளைப் பிடிக்கும் துறையாக இல்லாமல் கைதிகளின் மறுவாழ்விற்கு உதவும் துறையாக மாற்றிய பெருமை இவருக்கு உண்டு. மிக மோசமான சிறையாகக் கருதப்படும் திகார் சிறையில் 11000 ஆண் கைதிகளை 2 வருடங்களில் நடத்தையிலும், மனதிலும் மாற்றத்தை யோகா மூலம் கொண்டு வந்தார். அங்கு புகார் பெட்டி ஒன்றை அறிமுகப்படுத்தித் தவறு செய்யும் காவலர்களின் பெயர்களை அதில் எழுதிப் போடுமாறு கூறினார். இந்த அதிரடி நடவடிக்கை காவல்துறையையும் மேம்படுத்தியது.

மேலும் படிப்பறிவு உள்ளவர்கள் மற்றவர்களுக்குக் கல்வி கற்றுத்தரவும் ஏற்பாடு செய்து அவர்களுக்குப் பாதுகாப்பு உணர்வையும் முக்கியத்துவத்தையும் ஏற்படுத்தியதால்

அது கைதிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. குற்றவாளிகளின் பாலைவனமாகக் கருதப்பட்ட திகார் சிறை, திருந்தியவர்களின் சோலைவனமாகத் தனது தன்னிகரற்ற சகிப்புத்தன்மையால் மாற்றிய பெருமை கிரண்பேடிக்கு உண்டு.

அசாதாரணமான மன நிலையும் தைரியமும் மிக்க சிலரில் ஒருவர் கிரண்பேடி. தானும் நிமிர்ந்து, இந்தியப் பெண்களையும் தலைநிமிர வைத்தவர். நேர்மை, மனிதாபிமானம் ஆகியவற்றை இரு கண்களாகப் போற்றி நடந்ததால் வேலைத்திறனும், கடமை உணர்வும், சகிப்புத்தன்மையும் பல பதவிகளை இவருக்குப் பெற்றுத் தந்தது என்றால் அது மிகையாகது.

மலாலா யூசுப்

பாகிஸ்தான் நாட்டின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் உள்ள மிங்கோரா என்னும் ஊரில் வசிக்கும் ஒரு மாணவி. பெண்களின் உரிமைக்காகத் தனது சிறு வயதிலேயே போராடினார். அதனால் தாலிபான்களின் கோபத்திற்கும் ஆளானார். பெண்களின் கல்விக்காகப் போராடிய மலாலா தாலிபான் தீவிரவாதிகளால் தலையில் சுடப்பட்டார். பல மாதங்கள் சிகிச்சை பெற்று மீண்டு மறுஜென்மம் எடுத்தார். தொடர்ந்து போராடிய இவருக்கு, பாகிஸ்தான் அரசின் முதல் அமைதிப் பரிசு வழங்கி கௌரவப்படுத்தப்பட்டது, அவரின் சகிப்புத்தன்மைக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

6. இலக்கியங்கள் காட்டும் பெண்களின் சகிப்புத்தன்மை

இலக்கியங்கள் பல பெண்களைச் சகிப்புத்தன்மைக்கு உதாரணமாகக் காட்டினாலும், அவர்களுள் முக்கியமானவர்கள் சாவித்திரியும், சீதா தேவியும் ஆவர்.

சாவித்திரி

மத்திர நாட்டு மன்னனான அசுவபதிக்கு சூரியபகவானின் அருளால் கிடைத்த தவப்புதல்வி அழகில் சிறந்த சாவித்திரி. சாவித்திரியின் தெய்வீக அழகைப் பார்த்து, இவளை மணக்கும் தகுதி நமக்கில்லை என்று பல நாட்டு இளவரசர்களும் சென்றுவிட்டனர். எனவே, மன்னன் அசுவபதி மகளிடம் உனக்கு ஏற்ற மணவாளனைத் தேடிக் கண்டுபிடி என்று சொல்லி மகளுடன் படை பரிவாரங்களையும், தோழிப் பெண்களையும் அனுப்பி வைத்தார். தேர் காட்டிற்குள் சென்றபோது சால்வ நாட்டு மன்னன் துய்மத் சேனன், தன் மனைவி மற்றும் மகன் சத்தியவானுடன் வாழ்ந்து வந்தார். சத்தியவானைப் பார்த்து தன் இதயத்தைப் பறிகொடுத்த சாவித்திரி தன் தந்தையிடம் விருப்பத்தைத் தெரிவித்தார். அப்போது, அங்கு வந்த நாரதர் சத்தியவான் இன்னும் 12 மாதங்களே உயிரோடு இருக்கப் போகிறான் என்று கூற சாவித்திரியோ சத்தியவானைத் தவிர யாரையும் மணக்க மாட்டேன் என்று கூறினாள். அவளின் மன உறுதி கண்டு மணமுடித்து காட்டிற்கே அனுப்பி வைத்தான். நாட்கள் நகர்ந்தன. சத்தியவானின் இறப்பிற்கு 3 நாட்களே இருந்த நிலையில் கடும் விரதமும், பிரார்த்தனையும் மேற்கொண்டாள். எனினும் இதுபற்றி சத்தியவானிடம் எதுவும் சொல்லவில்லை. கடைசி நாள் விறகு வெட்ட கணவனுடன் தானும் சென்றாள். சிறிது நேரத்தில் சத்தியவான் சாவித்திரியின் மடிமீது தலைவைத்து உயிர்துறந்தான். சத்தியவானை அழைத்துச் செல்ல எமதூதர்கள் வந்தனர். ஆனால்,

அவர்களால் சாவித்திரி அமர்ந்த இடத்தை நெருங்க முடியவில்லை. திரும்பிச் சென்றனர். அடுத்ததாக எமனே நேரில் வந்தார். உத்தமியான சாவித்திரியின் கண்களுக்கு எமன் தெரிந்தான். எமன் சாவித்திரியைப் பார்த்து “மரணம் மனிதனின் விதி“ சத்தியவானை விட்டு விலகி நில் என்று கூற, விலகி நின்றாள். பின்னர், எமனைத் தொடர்ந்த சாவித்திரி ஒரு அன்புக் கணவனையும், அவனுடைய அன்பு மனைவியையும் உங்கள் மாறாத விதி பிரிக்கக் கூடாது என்று வேண்ட, அவளின் பதிபக்தியையும், சகிப்புத்தன்மையும் பாராட்டிய எமதர்மன் வேண்டும் ஒரு வரம் கேள் என்றான். அதற்கு என் மாமனாரின் சந்ததி அழியாமல் இருக்கவும் அவருடைய அரசு சத்தியவானின் மகன்களுக்குக் கிடைக்கவும் வரம் வேண்டினாள். இதைக் கேட்ட எமதர்மன் உன் கணவன் மீண்டும் உயிர் பெறுவான். உன் குழந்தைகள் அரசாள்வர் என்று வரமளித்தார். மாசியும், பங்குனியும் இணையும் நல்ல நாளில் சாவித்திரி விரதம் என்னும் காரடையான் நோன்பு நோற்க தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிடைக்கும் என்பது ஐதீகம்.

**சீதாதேவி**

தசரத மன்னன் கைகேயிக்குக் கொடுத்த வரத்தின் காரணமாக 14 ஆண்டுகள் இராமன் காட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது. இராமன் இருக்கும் இடம்தான் தனக்கு அயோத்தி என்று சீதா பிராட்டியும் உடன் சென்றாள். நாடாளும் சக்கரவர்த்தியின் மகளாகப் பிறந்த போதும், சகிப்புத் தன்மையும் பதிபக்தியும் கொண்ட சீதை வனவாசத்திற்குத் தயாரானாள். இராவணனால், வஞ்சகமாகச் சிறையெடுக்கப்பட்ட சீதை மிகுந்த பொறுமையோடு பல துன்பங்களுக்கிடையில் ஸ்ரீராமனுக்காகக் காத்திருந்தா இராவணனைக் கொன்று சீதையை மீட்ட இராமன், இராவணனின் இருப்பிடத்தில் வசித்ததால் எரியில் மூழ்கி வந்தால் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்ல, உன்னையன் பிற ஆடவனை மனதாலும் தீண்டாதது உண்மையானால் நான் தீக்குளிக்கும்பே அக்னி தீண்டாது செல்லட்டும் என்கிறாள். இலட்சுமணன் கண்ணீர் மல்க தீமுட்ட அ தேவன் பதிவிரதையான சீதா தேவியைத் தன் கைகளில் ஏந்தி வெளி வந்து, சீதை நீ சந்தேகப்படலாமா என்று இராமனை வினவினார். அதற்கு இராமன் எனக்குத் தெ சீதை களங்கமன்றவள். ஆனால், ஊராருக்குத் தெரிய வேண்டும் என்று செய் என்றே விளக்கமளித்தார்.

அவர்கள் அயோத்தி திரும்பி அரசாட்சி புரிந்து கொண்டிருந்தபோது சீதை கருவ ஒரு நாள் இராமபிரான் நகர்வலம் வந்த போது, ஒரு வீட்டில் இருவர் தனது மன் இராமன் பெரியவரா் இல்லை, சீதை பெரியவரா எனத் தர்க்கம் நடத்தி, கடை இராமன் பெரியவர். ஏனெனில், இன்னொருவர் இருப்பிடத்தில் வாழ்ந்த சீதையை கொண்டாரே என்று சொல்ல, ஸ்ரீராமன் அரண்மனை திரும்பியவுடன் சீதையைக் விட்டுவிடு என்று இலக்குவனிடம் கூறினார். கர்ப்பிணியான சீதையைக் கண்ண காட்டில் விட்டு விடுகிறான். அவள் லவ, குசா என்ற இரட்டையர்களைப் பெற்றெடு அவர்கள் ஸ்ரீராமனைச் சந்திக்கிறார்கள். அரண்மனைக்குத் திரும்பிய சீதா குழந்தைகளை நல்லபடியாக வளர்த்து உங்களிடம் கொடுத்துவிட்டேன் என்று பூமாதேவியுடன் ஐக்கியமானாள். சீதையின் சகிப்புத்தன்மை இராமயணத்தில் பங்கு வகிக்கிறது.

முடிவுரை

புராணங்களும் இலக்கியங்களும் பெண்களின் சகிப்புத்தன்மையை எடுத்துரைத்துள்ளன. அவர்கள் தங்கள் மேம்பட்ட சகிப்புத்தன்மையில் தன்னையும், குடும்பத்தையும், சமுதாயத்தையும் உயர்த்தியுள்ளனர். நவீன காலங்களிலும் பலசாதனைப் பெண்கள் தங்களின் மட்டற்ற சகிப்புத் தன்மையால் சிகரம் தொட்டனர் என்றால் மிகையாகாது. பல பெண்கள் நிகரற்ற திறமைகளைப் பெற்றிருந்தாலும் சகிப்புத் தன்மை இன்மையின் காரணமாகத் தோற்றும் போகின்றனர். அவர்கள், இக்கட்டுரையில் வாழும் சூத்திரங்களைத் தங்கள் வாழ்வின் முன்னோடிகளால் பின்பற்றினால் வெற்றி நிச்சயம்.

துணைநின்ற நூல்கள்

1. இணையதளம்
2. மகாகவி பாரதியார் நூல்கள் - சுயசரிதை
3. சாதனைப் பெண்கள் - சி.எஸ்.தேவநாதன்
4. வால்மீகி இராமயணம்
5. இந்தியப் பெண்மணிகள் - சுவாமி விவேகானந்தர், ராமகிருஷ்ண மடம், சென்னை.
6. மகாத்மா காந்தி வாழ்க்கை வரலாறு நூலிலிருந்து.



ISBN-978-93-87009-37-0
9 789387 009370

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம்செய்திட வேண்டும் அம்மா !
பங்கயக் கை நலம் பார்த்தல்லவோ பாரில் அறங்கள் வளரும், அம்மா ! – கவிமணி